# ஸங்கீத விதூஷிகள்

த. சங்கரன்

ஏறக்குறைய 50 வருஷங்களுக்கு முன்பு 'பெண் பிள்ளைகளின் பாட்டு' (பொம்பளை பாட்டு) என்ற ஒரு ஸங்கீதப்பிரிவு உண்டு. அதே போல் 'சின்ன மேளம்' 'பெரிய மேளம்' என்ற பிரிவுகளும் உண்டு. மாதரசிகள் வர்ணம், கீர்த்தனை, பதம், தில்லானா ஆகிய உருப்படிகளை கிரமமாகப் பாடுவது வழக்கம்; ராகம், ஸ்வரம் வின்யாஸங்கள் இராது; பல்லவி நிரவல் பாடிய விதூஷிகள் மிகவும் சொல்பம். எனக்குத் தெரிந்த விதூஷிகளில் பழநி அஞ்சுகத்தம்மாள் பல்லவி பாடுவதில் கைதேர்ந்தவர். ஆண்டவன் சாரீர ஸம்பத்தை உதவி இருப்பதால் 'பொம்பளை பாட்டு' கர்ணாம்ருதமாக அமைந்து விடும்; பக்க வாத்தியங்களுடன் போட்டியிடவும் தேவை இராது; எப்போதும் ஒரே பக்க ஜமாவைச் சேர்த்துக்கொண்டு ஒத்துழைப்புடன் கச்சேரிகள் அமைந்து விடும். அந்த நாட்களில் பிடில், மிருதங்கம் வாசிக்கும் பொம்பளைகள் கிடையாது. பாடும் பெண்மணிகளே சுருதி போட்டுக்கொண்டு இடது கையில் தாளம் போட்டுக்கொள்வார்கள். 'பெரிய வித்வான்கள்' பொம்பளைகளுடன் பக்க வாத்தியம் வாசிக்க மாட்டார்கள். ஸங்கீதத்தையும் நாட்டியத்தையும் பரம்பரைச் செல்வமாக வளர்த்த பெண்கள் மட்டுமே கச்சேரி மேடை ஏறுவது தர்மமாகக் கருதப்பட்டு வந்தது.

லக்ஷண வித்வான்களாகத் தனிப்பெருமை பெற்ற வித்வத் சிரோமணிகள் மெயின் ராகத்தை மணிக்கணக்கிலும், நாள் கணக்கிலும், வாரக் கணக்கிலும் ராக ஆலாபனை செய்வதில் நிபுணர்கள். 'வந்தது திரும்பி வராதபடி' கல்பனைப் பிரவாகமெடுக்கும். நிரவல், பல்லவி பாடினால் 'புல்லரித்து விடும்' லய வின்யாசம் 'அல்ல கல்லோலப்படும்'; 'பொறி கலங்கும்'. இந்த ஆழ்நிலையில் பக்க வாத்தியங்களுடன் போட்டியிடுவதால் கச்சேரி 'ஜஞ்ஜா மிருதம்' ஆகிவிடும். உருப்படிகளுக்கு அதிக இடம் கிடைக்காது. பெரிய மேளக் கச்சேரி செய்து வந்த வித்வத் சிரோமணிகளும் இந்த கோஷ்டியைச் சேர்ந்தவர்கள்; ஆனால் பரம்பரைச் செல்வத்தைப் பெற்றவர்கள் நாகஸ்வரம், தவில் வாசிப்பார்கள் அல்லது நட்டுவனார்களாக சின்ன மேளக் கச்சேரி அதாவது சதிர் கச்சேரிகளை நடத்தி வைப்பார்கள்.

அரை நூற்றாண்டுக்கு முன்பு ஸங்கீதம் பயில்வதும் ரஸிப்பதும் கூட ஒருவகைத் தீண்டாமையாகக் கருதப்பட்ட ஒரு தர்மம். கட்டுப்பாடுகளை மீறி ஸங்கீத ரஸனைக்குத் துணிந்தவர்கள் பொம்பளைக் கச்சேரிகளைக் கேட்பதில்லை; 'மடியாக' வித்வான்களின் கச்சேரிகளை மட்டும் கேட்டு பக்தி யோகத்தில் மூழ்கிவிடுவார்கள். ஆகவே பொம்பளைப் பாட்டின் 'மாற்று' ஒரு குண்டுமணி குறைவாகவே மதிக்கப்பட்டு வந்தது. பொம்பளைகளுக்கு ராகம் பல்லவி மனோதர்மங்களில் பயிற்சி தருவதும் கிடையாது. 'சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை' என்று ஏளனமாகவும் வர்ணிப்பதுண்டு. ஆனால் ஆண்டவனின் பக்ஷபாதமான வரப்பிரசாதத்தைப் பெற்ற தமது குரலை வெற்றி ஆயுதமாகப் பூண்டு சிராவ்யமாகக் 'கிளிப்பிள்ளைகள்' பாடிவிடுவார்கள். பொம்பளைப் பாட்டில் புகழ் பெற்ற மாதரசிகள் தென்னாட்டின் எல்லா மாவட்டங்களிலும் உதித்தபோதிலும் பலரும் சென்னைக்குக்குடியேறி சென்னை நகரைச் ஸங்கீதபீடமாகச் சிறப்பித்தார்கள். பலரின் வரலாறு முழுவதும் கிடைக்காவிடினும் சில குறிப்புகளை இந்த ஸ்ரீ கிருஷ்ணகான ஸபாவின் கோகுலாஷ்டமி ஸங்கீத உற்சவத்தின் இடையே நினைவுபடுத்திக் கொள்ளலாம். ஸங்கீதத்தை வளர்த்த மாதரசிகள் எல்லோரும் ஒரே வட்டாரத்தில் அதாவது George Town ல் குடியேறி இருந்தார்கள். 50 வருஷங்களுக்கு முன்பு சென்னை George Townல் வீணை தனம்மாள், ஏனாதி லக்ஷ்மீ நாராயணி ஸஹோதரிகள், தியாகராஜ பக்த சிரோமணி பெங்களூர் நாகரத்னம்மாள், கோலார் நாகரத்னம், திருவாரூர் ராஜாயி, பெங்களூர் தாயி, கோயம்புத்தூர் தாயி அம்மாள், வனஜாக்ஷி, சேலம் கோதாவரி, சேலம் மீனாக்ஷி அம்மாள். தென் ஜில்லாக்களிலிருந்து ஸங்கீத ஸேவை செய்தவர் அநேகர். பட்டம் பதவிகளை முதன் முறையாகப் பெற்றவர் வித்யா ஸுந்தரி

பெங்களூர் நாகரத்தினம்மாள். தமிழ் தெலுங்கு, தன் மாத்ரு பாஷை கன்னடம், ஸம்ஸ்கிருத பாஷைகளிலும் நல்ல பிரக்ஞையுள்ளவர். ராஜ மஹேந்திரபுரத்தில் நடைபெற்ற மஹா நாட்டுக்கு தனி அழைப்பு பெற்றதும் அன்றி மஹா பண்டிதர்கள் இவருக்கு ஸம்ஸ்கிருதத்தில் வரவேற்புரை அளித்தார்கள். ஸங்கீத திக் விஜயம் உண்மையாகவே செய்தவர். பிரயாண வசதிக்காகவே அவர் Collapsible தம்புரா செய்து பெட்டிக்குள் தூக்கிச் செல்வதுண்டு. தனக்கு ஸங்கீத சிக்ஷை சொல்லிக் கொடுப்பதை முன்னிட்டு உடலையும் ஆவியையும் அர்ப்பணம் செய்த தாயார் புட்டுலக்ஷ்மி அம்மாளிடமும் குருமார்களாகிய முனுசாமி அப்பா, பிடாரம் கிருஷ்ணப்பா, கரிகரிராவ் ஆகியோரிடம் மிகவும் பக்தியுள்ளவர். பல பட்டங்களைப் பெற்றும் தியாகராஜ ஸ்வாமிகளுக்கு அடிமையாக வாழ்ந்து திருவையாற்றில் கோவில் கட்டிய புண்ணியம் நாகரத்னம்மாளுக்கு உரித்தானது. இவர் பதிவு செய்த பல இசைத் தட்டுகளில் அபூர்வ ஜாவளிகளும், தனது குருமார்களின் உருப்படிகளும் நிறைந்துள்ளன.

1920ல் காலமான காஞ்சீபுரம் தனகோடி அம்மாள் நாயனுபிள்ளையின் பெரிய தாயார். சியாமா சாஸ்திரியின் ஸந்ததியைச்சேர்ந்த கச்சு சாஸ்திரியின் சிஷ்ய பரம்பரையில் வந்தவர். சியாமா சாஸ்திரி, சுப்பராய சாஸ்திரி, அண்ணு ஸ்வாமி சாஸ்திரி, உருப்படிகள் பாடாந்திரம் பிரமிக்கத்தக்கது. இந்த வகையைச் சேர்ந்த தமிழ் கீர்த்தனங்களாகிய — ஸந்ததம் என்னை ரக்ஷிப்பாய் — பரஸ் ஆதி (சியாமா சாஸ்திரி) ஸ்ரீ காமாக்ஷி கடாக்ஷி — வசந்தா — ஆதி (சுப்பராய சாஸ்திரி) ஸங்கீத உலகிற்கு கிடைத் துள்ளன. அண்ணுஸ்வாமி சாஸ்திரியின் சஹானு உருப்படி; 'இங்கெவருன்னுரு' ஒரு மிகவும் அபூர்வ கீர்த்தனை. தனகோடி அம் மாளும், அவரது தங்கை கமாக்ஷி அம்மாள் (நாயனு பிள்ளையின் தாயார்) ஜோடியாக மிகவும் பௌருஷமாகப் பாடுவார்கள். இவர்களது வாரிசாக இவரது தமையனின் குமாரத்திகள் குப்பம்மாளும், ராமதிலகம்மாளும் பாடி வந்தார்கள். அருணாசலக் கவிராயரின் ராமா யணக்கீர்த்தனங்களும், துரைசாமிக் கவிராயரின் பழனி ஆண்டவரின் கீர்த்தனங்களையும் சரமாரிப் பொழிவார்கள். அந்த வகையைச் சேர்ந்த பாட லாகிய பேகடை உருப்படி — இன்னும் பராமுக மேனே? D. K. பட்டம்மாள் Record செய்துள் ளார்கள். பெங்களூர் நாகரத்னம்மாள் மைசூரைவிட்டுத் தமிழ் நாட்டுக்கு வந்து ஸங்கீதப் பயிற்சிக்கு தனகோடி அம்மாளை முதன் முதலாக அணுகினார்கள். உடல் நிலைக் கோளாறினால் தனகோடி அம்மாள் நாகரத்னம் மாளை ஏற்றுக்கொள்ளவில்லை. ஸர்வ வாத்திய நிகழ்ச்சி யெனும் வழிபாட்டு இசை வரிசையில் தனகோடி அம்மாள் இரவு முழுதும் நின்று கொண்டு கோவிலில் பாடுவார்கள். சுமார் 75 ஆண்டுகளுக்கு முன் தனகோடி அம்மாளின் தாயார் விசாலாக்ஷி அம்மாள் கச்சேரிகளில் வயலின் பக்கவாத்தியம் வாசித்து வந்தார்கள். பெரிய காஞ்சீபுரம் வித்வான் நாயனுபிள்ளை வீதியில் இவர்களது மூதாதையரின் வீடு, 'மேட்டு காமாக்ஷி' வீடு என்ற பெயருடன் பெருமையடைந்துள்ளது.

'ஏனாதி ஸகோதரிகள்' என்ற பெயருடன் லக்ஷ்மீநாராயணி அம்மாளும், ரங்கைய அம்மாளும் பட்டணம் ஸுப்ரமணிய அய்யரின் மாணவிகள். மத்திம கால கீர்த்தனைகளைப் பாடு வதில் இவர்களுக்கு ஈடு இணையே கிடையாது. ஏராளமான ஜாவளிகளை அதி சிராவ்யமாகப் பாடுவார்கள். "ஏனாதியாரைப் போல ஒரு ஜாவளியாகிலும் பாடிவிட்டுத் தான் உயிரை விட வேண்டும்" என வீணை தனம்மாளின் தங்கை, ரூபாவதி அம்மாள் பொருமைப் படுவதுண்டு. ஏனாதியாரின் ஸங்கீதத்தில் வசியமாகாத வித்வான்களே கிடையாது. George Town-ல் ஆறுமுகம் தெருவில் வசித்து வந்தார்கள். திருக்கோடி காவல் கிருஷ்ணையருக்கு இவர்களது பாட்டில் மிகவும் மதிப்புண்டு.

அவர்களுடைய வீட்டுக்கடுத்த ராம கிருஷ்ணன் தெருவில் வீணை தனம்மாளும், அவருடைய நான்கு பெண்கள், ராஜலக்ஷ்மி, லக்ஷ்மீரத்னம், ஜயலக்ஷ்மி, காமாக்ஷி வசித்து வந்தனர். தனம்மாளின் பாட்டியார் தஞ்சாவூர் காமாக்ஷி அம்மாள் தஞ்சை அரண்மனை நர்த்தகி. பரதம் கணபதி சாஸ்திரியாரின் மாணவி. கணபதி சாஸ்திரியார் பட்டணம் ஸுப்ர மணிய அய்யரின் தாய்மாமன். ஆனை-ஐயா ஸஹோதரர்களிடமும் ஸுப்பராய சாஸ்திரி- அண்ணுஸ்வாமி சாஸ்திரியாரிடம் வாய்ப்பாட்டு பயின்றார்; காமாக்ஷி அம்மாளின் தாயாருமான ஸுந்தரத்தம்மாள் மிகவும் சிறந்த பாடகி, மிகவும் ஸுஸ்வரமான ஸாரீர ஸம்பத்துள்ளவர். அவர் தோடி ராகத்தில் நன்னுப்ரோசுடகு,

கீர்த்தனை பாடுகையில் 'மாயம்ம காமாக்ஷிம்ம' எனும் பகுதி ரஸித்து அண்ணாசாமி சாஸ்திரியார் பாராட்டுவதுண்டு. ஸுந்தரம்மாளின் ஸஹோதரர் பிடில் அப்பாக்கண்ணு மிகவும் சிறந்த மேதை; முத்யாலுபேட்டை பொன்னுசாமி பிள்ளையின் மாணவர். ஸுந்தரத்தம்மாளின் இருபெண்களான தனம்மாளும் ரூபாவதி அம்மாளும் ஜோடியாக வாய்ப்பாட்டு பாடி வந்தார்கள். பிறகு தனம்மாள் வீணை பயின்று தனியாகப் பிரிந்து விட்டார். இவருடைய குரு சாத்தனூர் பஞ்சுவையர், தானம் பாடுவதிலும் மத்திம கால ஸ்வரம் பாடுவதிலும் அசகாய சூரர். தனம்மாளுக்கு பாலகிருஷ்ண நாயுடுவிடம் பதங்களும், தர்மபுரி ஸுப்பராவிடம் ஜாவளிகளும் பாடம். தனம்மாளின் தமையன் நாராயணஸ்வாமி பிள்ளையும் தனது மாமன் அப்பாக்குட்டியைப் போல சிறப்பாக வயலின் வாசிப்பார். 1938-ல் மறைந்த தனம்மாளின் ஸங்கீதத்தை ரஸித்த ரஸிகர்கள் பலரும் இத்தலைமுறையில் இருக்கின்றனர்.

தனம்மாளின் பெண்களில் மூத்தவரும் (ராஜலக்ஷ்மி, லக்ஷ்மிரத்தினம்-(பெரிய குட்டி, சின்ன குட்டி) ஜோடியாகப் பாடி வந்தனர். ராஜலக்ஷ்மிக்கு ஸங்கீத அக்ஷராப்யாசம் பட்ணம் ஸுப்ரமண்ய அய்யர் நடத்தினார். திருவொற்றியூர் தியாகையர், கான்ஸாஹேப் அப்துல் கரீம் கான் ஆகியோரிடம் லக்ஷ்மிரத்னம் சிக்ஷை பெற்றார். ஜயம்மாளுக்குத்தன் தாயார் வாயிலாகவும் மகள் பாலசரஸ்வதி மூலமாகவும் புகழ். இளம் பிராயத்தில் வாய்ப்பாட்டுடன் தபேலா வாசிக்கவும் பயிற்சி பெற்றார். ஏனெனில் தன் தமக்கைகளுடன் பக்க வாத்தியம் வாசிக்க கடைசீ மகள் காமாக்ஷி வயலின் வாசிக்கத் தலைப்பட்டார். காமாக்ஷியின் புதல்விகளுள் பிருந்தா முக்தாவும் வயலின் வாசித்து வந்த அபிராம சுந்தரியும் இத்தலைமுறை மக்களுக்கு நன்றாகத் தெரியும். கீழ் வரிசையில் வேக வாஹினியும் இப்போது மேடைக் கச்சேரி நடத்தி வருகிறார். தனம்மாளின் பெண்களுடன் சம ஈடாக திருவாரூர் ராஜாயி மிகவும் கியாதியுள்ளவர். மிகவும் சிராவ்யமான சாரீரம். ஜலதரங்கம் விமரிசையாக வாசிப்பார். ராஜாயி ஸேது ஸமஸ்தானத்தில் பரத நாட்டியம் ஆடிய போது அரண்மனையில் கனகாபிஷேகம் செய்வித்தார்கள். ஜலதரங்கம் ஸுப்பையரிடம், சிமிழி ஸுந்தரமையரிடமும் ஆதி சிக்ஷை பெற்ற ராஜாயி தனம்மாளிடம் பிற்காலத்தில் பாடம் சொல்லிக்கொண்டார்.

அந்த நாளில் மூத்த வரிசையில் மிகவும் பிரக்யாதியுடன் பாடி வந்தவர் கோயம்புத்தூர் தாயி அம்மாள். ஆந்திர நாட்டில் அவர் பாட்டைக் கேட்டவர்கள், "தாயி! நீ பாட ஹாயி" என்று கொண்டாடுவார்கள். தாயி அம்மாள் பாடி வந்த ஜாவளிகளுள் 'மாதாட பாரதேனோ! மக்களின் உள்ளத்தை மிகவும் கவர்ந்து இருந்தது. தாயி அம்மாள் தேவாரம், திருவாசகப் பாடல்களை மிகவும் உருக்கமாகப் பாடுவார்கள். திருவொற்றியூர் தியாகையர் தாயி அம்மாளுக்குத் தன் பாடல்கள் பலவற்றைச் சொல்லிக் கொடுத்து வந்தார். இசைத்தட்டு பலவற்றை தாயி அம்மாள் பதிவு செய்திருந்தார். அவருடைய பேத்தி கோயம்புத்தூர் ஸகுந்தலா தேவி தமது பரம்பரைச் செல்வத்தைப் பாதுகாத்து வருகிறார்.

மதுரை ஷண்முக வடிவம்மாளைத் தெரியாது எப்படி இருக்கமுடியும்? M S யை ஈன்றெடுத்து ஸங்கீதத்தை ஊட்டி வளர்த்து பிரபல வீணை விதூஷியை எப்படி தெரிந்துகொள்ளாமல் ரஸிகர்கள் இருக்கமுடியும்? ஷண்முக வடிவு அம்மாள் கரூர் வெங்கடரமண பாகவதரின் மாணவி. பரம்பரை ஸங்கீதத்தில் ஊறியவர்.

திருச்செந்தூர் ஷண்முக வடிவு அம்மாள்

தமிழ்ப் பாடல்கள் உருக்கமாகப் பாடிப் புகழ் பெற்ற இசையரசி. ஏராளமாக இசைத்தட்டுகளில் பல அபூர்வ உருப்படிகளைப்பாடியுள்ளார்.

திண்டுக்கல் ஜானகி அம்மாள் லயமேதை. இலுப்பூர் பொன்னுசாமி பிள்ளையின் மாணவி. சேலம் கோதாவரி கணக்கற்ற ஜாவளிகளைப் பாடக் கூடியவர். நடமாட்டத்தில் இல்லாத பல ஜாவளிகளை Record செய்துள்ளார்.

இதே போல் பரத நாட்டியம் ஆடிப்புகழ் பெற்ற மாதரசிகள் எண்ணற்றவர். புதுக்கோட்டை அம்மாளு அம்மாள் ஸரபேந்திர பூபாலக்குறவஞ்சி நாடகத்தில் குறத்தியாக நடிப்பதில் அழியாப் புகழ் பெற்றவர்.

திருவாளப்புத்தூர் கல்யாணி அம்மாளும் அவருடைய இரு குமாரத்திகள், ராஜலக்ஷ்மி, ஜீவரத்னம் பந்தநல்லூர் மீனாக்ஷிஸுந்தரம் பிள்ளையின் மாணவிகள்.

திருவாளப்புத்தூர் ஸகோதரிகளைப் போலவே கும்பகோணம் பானுமதியும் வரலக்ஷ்மி ஜோடியாக ஆடுவதில் மிகவும் கியாதி பெற்றவர்கள்.

ஸமீபத்தில் மறைந்த மயிலாப்பூர் கௌரி அம்மாள் பாலசரஸ்வதியின் பிரதம குரு. இன்றும் ருக்மணி அருண்டேல், ராம்கோபால், ஸ்வர்ண ஸரஸ்வதி போன்ற பல பிரபல நாட்டிய மணிகளுக்கும் குரு. பரத நாட்டியத்திற்காக ஜனாதிபதி பரிசு பெற்று கலாக்ஷேத்திரத்தில் ஆசிரியர் பதவி ஏற்றிருந்தார். பாடிக் கொண்டே ஆடவல்லவர். பதங்களும், ஜாவளிகளும் பிரம்மாண்டமான பாடாந்திரம் உள்ளவர். அரியக்குடி ராமானுஜ அய்யங்கார் கௌரி அம்மாளிடம் பல பதங்களைப் பாடஞ் செய்துள்ளார். பல அரிய ஜாவளிகளை சிருஷ்டித்த திருப்பனந்தாள் பட்டாபிராமையாவிடம் நேர்முகமாக ஜாவளிகளைப் பாடஞ் செய்தவர்.

இதேபோல் பட்டாபிராமையாவின் பிரதம சிஷ்யை லலிதாங்கி. M. L. வஸந்தகுமாரியின் தாயார். குளுமையான சாரீரஸ்ம்பத்தைப் பெற்றவர். இவருடைய முயற்சியினால் புரந்தர தாஸருடைய பதங்கள் ஸ்வர தாளக்குறிப்புடன் அச்சிடப்பட்டுள்ளன.

பெண்மணிகளுக்குள் முதன் முதலான ஹரிகதை செய்ய முன்வந்தவர் காயனபடு கீர்த்தனபடு C. சரஸ்வதிபாய். தேசபக்தர் பாலகங்காதர திலகரின் பெரும் மதிப்பைப் பெற்றவர். கவாய் யாகூப் ஆலியின் சிஷ்யையாகி ஹிந்துஸ்தானி ஸங்கீதத்திலும் நல்ல தேர்ச்சி பெற்றார்.

பெண்களுக்குள் புல்லாங்குழல் வாசிக்க முதலாகத் தலைப்பட்டவர் வாளாடி ருக்மணி; ஸங்கீத பரம்பரையைச் சேர்ந்தவர். அவருடைய தம்பி பல ஆண்டுகள் திருச்சி வானொலி வித்வானாக மிருதங்கம் வாசித்து வந்தார்.

மறைந்த மாதரசிகள் கணக்கற்றவர். இந்தத் தலைமுறை விதூஷிகளை ரஸிகர்கள் நன்றாக அறிவர்.

கடவுள் பக்ஷபாதமாகப் பெண்கள் சார்பில் சாரீர ஸம்பத்தை உதவியுள்ளார். இப்போது பெண்மணிகள் பல துறைகளில் ஆண்களுடன் சமத்துவம் வேண்டி போர் தொடத்துள்ளனர். மிரட்டலுக்குப் பயந்து ஆண்கள் தமது பௌருஷமான சாரீரத்தைப் பெண்களுக்கு கொடுத்து ஏமாறக்கூடாது!

*With best compliments of :-*

# THIRAJ AGENCIES

AGENTS & DEALERS FOR GRINDING WHEELS

**14, TANJORE ROAD, T. NAGAR,**

**MADRAS-600017**

Phone: 444875